**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.238/2017
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : சுரேஷ்காந்த் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of February 2024.

16.02.2024

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் உதவிமேலாளராக பணியாற்றி வருகிறேன். எனது உடன்பிறந்த தம்பி சதீஸ்காந்த்தும் நானும் நல்ல நண்பர்களாக பழகிவருவோம். இருவரும் எங்களது விஷயங்களை ஒருவொருக்கொருவர் பரிமாறிக்கொள்வோம். 2013 ம் வருடம் டிசம்பர் மாதம் அரையாண்டு தேர்வு விடுமுறையில் எனது தம்பி ஊருக்கு வந்திருந்தான். நான் அப்போது அவனிடம் பள்ளிக்கூடம் எவ்வாறு போகிறது என்று பொதுவாக கேட்டேன். அதற்கு எனது தம்பி சதீஸ்காந்த் ஒரு நாள் திருவிழா முடித்துவிட்டு விடுதிக்கு இரவு படுக்க சென்றபோது அங்கு பள்ளி தாளாலர் 1ம் எதிரி வின்சென்ட் டி ராஜாவும் ஒரு பெண்ணும் தவறான முறையில் இருந்தை பார்த்ததாகவும், அதிலிருந்து 1ம் எதிரி எனது தம்பியிடம் முறையாக நடக்கவில்லை என்று என்னிடம் கூறினார்.

2) எனது தம்பியின் இடதுகாலில் காயம் இருந்தது. அதுகுறித்து ஏன் என்று கேட்டேன். கட்டணம் வசூலிப்பது தொடர்பாக மாணவர்கள் கூட்டமைப்பு நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்டதால் 1ம் எதிரி வின்சென்ட் டி ராஜா அடித்ததாக

கூறினார். அரையாண்டு விடுமுறை முடித்து நான் எனது பள்ளியான ராயப்பன்பட்டியில் உள்ள ஆலோசியஸ் பள்ளிக்கு சென்றுவிட்டேன். பின்பு 03.01.2014 ம் தேதி காலை எனது தம்பிக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி எனது சித்தப்பா என்னை அழைத்துக்கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு வைத்து எனது தம்பி தற்கொலை செய்துகொண்டதாக தெரிந்தது.

3) பள்ளிக்கூடத்தில் பரிட்சையில் பிட் அடித்ததால் பெற்றோரை அழைத்து வரச்சொன்னதாகவும் அதற்கு பயந்துகொண்டு எனது தம்பி தற்கொலை செய்துகொண்டதாகவும் பேசிக்கொண்டார்கள். நான் ஏற்கெனவே எனது தம்பி படித்த திருவரங்கத்தில் உள்ள திருஇருதய மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு வரை படித்ததால் எனது தம்பி தூக்குமாட்டிக்கொண்டு இறந்ததாக குறிப்பிடும் அறையில் இரண்டு மேஜை மற்றும் ஒரு சேர் வைத்தால் மட்டுமே அந்த அறையின் மேற்பரப்பை தொடமுடியும், ஒரு நபரால் ஒரு மேஜை மீது இன்னொரு மேஜையை வைப்பது என்பது இயலாத காரியமாகும். அரையாண்டு தேர்வு விடுமுறையில் நானும், எனது தம்பியும் நல்லமுறையில் தான் சந்தோசமாக விளையாடிக்கொண்டிருந்தோம். இது தொடர்பாக போலிசார் விசாரித்தார்கள்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.